**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வந்தவாசி, திருவண்ணாமலை மாவட்டம்.</u>**

முன்னிலை– திருமதி.செ. மகாலட்சுமி பி.ஏ., எம்.எல்.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி, வந்தவாசி

(திருவள்ளுவர் ஆண்டு 2056 விஸ்வாவசு, வருடம், கார்த்திகை மாதம் 08–ம் நாள்)

2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24–ம் நாள் திங்கட்கிழமை

வழக்கிடை மனு எண்.02/2025 in அசல் மனு எண். **02/2009**

1. வெங்கட்ராமன்(இறந்துவிட்டார்)
2. குணா
3. ராமச்சந்திரன்(எ) குரு
4. ராதா அம்மாள்
5. ஷர்மிளா
6. கோபு
7. குமார் ...மனுதாரர்கள்/ 1 முதல் 4 மற்றும் 5 முதல் 7 பிரதிவாதிகள்

–எதிர்–

1. மண்ணாங்கட்டி(இறந்துவிட்டார்)
2. கௌரி
3. பாலமுருகன்
4. ராஜேஷ் .... எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனு இந்நீதிமன்றம் முன்பாக இறுதியாக 04.11.2025 அன்று விசாரணைக்கு வந்து, மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.ராமலிங்கம், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R. மணி, அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், வழக்காவணங்கள், மனு மற்றும் எதிர் உரை ஆகியவற்றை பரிசீலனை செய்தும், இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்;

**<u>உத்தரவு</u>**

இம்மனுவானது மனுவில் சொல்லியுள்ள காரணங்களுக்காக பிரதிவாதிகள் தரப்பில் தாவா சொத்து பற்றிய வருவாய்துறை ஆவணங்களுடன் வந்தவாசி வட்டாட்சியர் அவர்களை கூடுதல் சாட்சியாக விசாரணை செய்ய உத்தரவிட வேண்டி கட்டளை XVI விதி 6 மற்றும் 151 உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2.மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:–</u>**

தான் இம்மனுவின் மனுதாரர் என்றும், தாவாவில் 2ம் பிரதிவாதி என்றும், மேற்படி தாவா சொத்துரிமை மற்றும் நிரந்தர தடை உத்தரவு பரிகாரம் கோரி மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், மனுதாரர் அ.வ.எண்.317/2008 வழக்கில் சொத்துரிமை, நிரந்தர தடை உத்தரவு பரிகாரங்க் கோரி தொடர்ந்த தாவா இரண்டையும் சேர்த்து இணைந்த வழக்காக விசாரணைக்கு எடுத்து நடைபெற்று வருகிறது என்றும், (இரு வழக்குகளுக்கும்) அ.வ.எண். 02/2009 வழக்கில் பிரதிவாதி தரப்பு சாட்சி 1 விசாரணை செய்யப்பட்டு கூடுதல் சாட்சிகள் விசாணை செய்திட 22.07.2025 அன்று வாய்தா போடப்பட்டது என்றும், இவ்வழக்கு வாதிகள் தாவா சொத்து தங்கள் அனுபவத்தில் உள்ளது என்பதற்கு வருவாய்துறை ஆவணங்கள் சிட்டா, அடங்கல் நகல்கள் தாக்கல் செய்துள்ளனர் என்றும், தாவா சொத்து கரம்பாக உள்ளது என்றும், அதில் வளரும் முள்வேளி மரங்களை வெட்டி விற்பனை செய்தும் தாவா சொத்து மனுதாரர்கள்/பிரதிவாதிகள் அனுபவத்தில் உள்ளது என எதிர்வியாஜ்ஜியம் செய்து வருவதாகவும், தாவா சொத்தில் வாதிகளுக்கு அனுபவம் உள்ளதாக வாதிகள் தரப்பில் வருவாய்துறை ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளனர் என்றும், அந்த ஆவணங்களின் பேரில் ஏற்படும் சந்தேகத்தினை நீதிமன்றத்திற்கு தெளிவுபடுத்திட வேண்டி தாவா சொத்து பற்றி வருவாய்துறை ஆவணங்களை பராமரிக்கும் வட்டாட்சியர் அவர்களை இத்தாவாவிற்கு பிரதிவாதிகள் தரப்பு கூடுதல் சாட்சியாக அழைத்து விசாரணை செய்தால் நீதிமன்றத்திற்கு தெளிவான முடிவு தெரியவரும் என்பதால் தாவா சொத்து

பற்றிய வருவாய்துறை ஆவணங்களுடன் வந்தவாசி தாசில்தார் அவர்கள் சாட்சியமளித்திட சாட்சிபடி கட்டிட அழைப்பாணை அனுப்ப பிரதிவாதிகளுக்கு அனுமதியளித்து தக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டியது மிகவும் அவசியமாயும், நியாயமாயும் உள்ளது என்றும், இல்லையேல் மனுதாரர்களுக்கு மிகுந்த கஷ்ட நஷ்டம் ஏற்படும் என்றும், எனவே, தாவா சொத்து பற்றிய வருவாய்துறை ஆவணங்களுடன் வந்தவாசி தாசில்தார் சாட்சியமளித்திட அனுமதியளிக்க தக்க உத்திரவு பிறப்பிக்க வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

**3. 3ம் எதிர்மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள எதிர் உரையின் சுருக்கம்(மற்ற வாதிகளுக்காகவும் இம்மனு அடாப்ட் செய்யப்பட்டுள்ளது):-**

(3.1)இம்மனுவில் மனுதாரர்கள் சொல்லியுள்ள சங்கதிகள் சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் செல்லத்தக்கது அல்ல என்றும், எதிர்மனுதாரர்களின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டுமென்றும், மற்ற எதிர்மனுதாரர்கள்/வாதிகளுக்காகவும் இந்த எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், எதிர்மனுதாரர்கள் மனுவில் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகளை மனுதாரர்களே நிரூபிக்க கடமைப்பட்டவர்கள் என்றும், மேற்படி தாவாவில் சொத்துரிமை மற்றும் நிரந்தர தடை உத்தரவு பரிகாரம் கோரி எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி வழக்கில் வாதிகள் தாக்கல் செய்துள்ள பட்டா, அடங்கல் நகல்கள் யாவையும் நீதிமன்ற சான்று பெற்று அதன் அடிப்படையில் வருவாய்துறையில் பெற்று குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், மனுதாரர்களுகென சிறு ஆவணமும் வருவாய்துறையிலோ, பதிவுத்துறையிலோ இல்லாத நிலையில் தேவையற்ற நிலையில் வாதிகள் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை சரிபார்க்க வேண்டி வந்தவாசி வட்டாட்சியரை விசாரிக்க வேண்டுமென்பது தேவையற்ற வேலையாகுமென்றும், வந்தவாசி வட்டாட்சியரும் ஆவணங்களை பார்த்துதான் சாட்சியமளிக்கப்போகிறாரே தவிர வழக்குச் சொத்து இடத்தை பார்வையிட்டு அல்ல என்றும், வருவாய்துறையின் அடிமட்ட ஊழியர்கள் தான் நிலங்களை பார்வையிட்டு அடங்கல் போன்ற ஆவணங்களை பதிவு செய்வார்களே ஒழிய வட்டாட்சியர் சென்று பார்வையிடமாட்டார் என்றும்,

மேலும் ஆண்டுதோறும் வட்டாட்சியரும், இதர வருவாய்துறை அதிகாரிகளும் மாறிக்கொண்டே இருப்பார்கள் என்றும், எனவே, ஆவணங்களை பொருத்துத்தான் சாட்சியமிளக்க இயலும். எனவே, ஆவணங்களைப் பார்த்து சாட்சியமளிப்பதற்கு ஏற்கனவே ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்ட நிலையில் வட்டாட்சியரை வரவழைப்பது தேவையற்ற செயலாகுமென்றும், ஒரு வேளை மனுதாரர்களுக்கு சாதகமாக ஏதேனும் ஆவணமிருப்பின் அதனை நீதித்துறை சான்று மூலம் பெற்று மாண்பமை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலும் என்றும், தேவையின்றி வட்டாட்சியரை விசாரிக்கவேண்டுமென்பதும் தாக்கல் செய்துள்ள அனைத்து வருவாய்துறை ஆவணங்களுக்கான அசல் ஆவணங்களையும் பதிவேடுகளையும் கொண்டு வரவேண்டுமென்பதும் தேவையற்ற வேலையாகும் என்றும், எந்தவகையிலும் வழக்கு விசாரணைக்குப் பலனளிக்காத வேலையாகும் என்றும், எனவே, மேற்படி மனுவினை எதிர்மனுதாரர்களின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது.

4. <u>இங்கு தீர்மானிக்க வேண்டிய அம்சம் யாதெனில்:–</u>

**மனுதாரர்கள் கோரியுள்ளவாறு தாவா சொத்து பற்றிய வருவாய்துறை ஆவணங்களுடன் வந்தவாசி தாசில்தார் சாட்சியமளித்திட அனுமதியளிக்க தக்க உத்திரவு பிறப்பிக்க வேண்டுமா, இல்லையா? என்பதேயாகும்.**

(i) மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் எதுவும் இல்லை. இருதரப்பின் வாதம் கேட்கப்பட்டது. அசல் வழக்கானது எதிர்மனுதாரர்கள்/வாதிகள், மனுதாரர்கள்/ பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளனர். வழக்கு ஆவணங்களை உற்றுநோக்கும் போது வழக்கின் வாதிகள், இந்த மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா சொத்தில் விளம்புகை பரிகாரமும், நிரந்தர தடையுத்தரவு பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். மேலும், மனுதாரர்கள் தரப்பின் முக்கிய கோரிக்கை யாதெனில், வாதிகள் தரப்பில் வருவாய்துறை ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளனர் என்றும், அந்த ஆவணங்களின் பேரில் ஏற்படும் சந்தேகத்தினை நீதிமன்றத்திற்கு தெளிவுபடுத்தவும், தாவா சொத்து பற்றி வருவாய்துறை ஆவணங்களை பராமரிக்கும் வட்டாட்சியர் அவர்களை

இத்தாவாவிற்கு பிரதிவாதிகள் தரப்பு கூடுதல் சாட்சியாக அழைத்து விசாரணை செய்தால் நீதிமன்றத்திற்கு தெளிவான முடிவு தெரியவரும் என்பதால் தாவா சொத்து பற்றிய வருவாய்துறை ஆவணங்களுடன் வந்தவாசி தாசில்தார் அவர்கள் சாட்சியமளித்திட சாட்சிபடி கட்டிட அழைப்பாணை அனுப்ப பிரதிவாதிகளுக்கு அனுமதியளித்து தக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்றும் என்பதாகும். மாறாக எதிர்மனுதாரர்கள் தரப்பின் முக்கிய வாதம் யாதெனில், வந்தவாசி வட்டாட்சியரும் ஆவணங்களை பார்த்துதான் சாட்சியமளிக்கப்போகிறாரே தவிர வழக்குச் சொத்து இடத்தை பார்வையிட்டு அல்ல என்றும், மேலும் ஆண்டுதோறும் வட்டாட்சியரும், இதர வருவாய்துறை அதிகாரிகளும் மாறிக்கொண்டே இருப்பார்கள் என்றும், எனவே, ஆவணங்களை பொருத்துத்தான் சாட்சியமளிக்க இயலும். எனவே, ஆவணங்களைப் பார்த்து சாட்சியமளிப்பதற்கு ஏற்கனவே ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்ட நிலையில் வட்டாட்சியரை வரவழைப்பது தேவையற்ற செயல் என்றும், ஒரு வேளை மனுதாரர்களுக்கு சாதகமாக ஏதேனும் ஆவணமிருப்பின் அதனை நீதித்துறை சான்று மூலம் பெற்று மாண்பமை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம் என்றும், தேவையின்றி வட்டாட்சியரை விசாரிக்கவேண்டுமென்பதும் தாக்கல் செய்துள்ள அனைத்து வருவாய்துறை ஆவணங்களுக்கான அசல் ஆவணங்களையும் பதிவேடுகளையும் கொண்டு வரவேண்டுமென்பதும் தேவையற்றது என்றும், அசல் வழக்கை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்திலும், நீதிமன்றத்தின் நேரத்தை வீணடிக்க வேண்டுமென்ற நோக்கத்திலும் மனுதாரர்கள் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதால் இம்மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்பதாகும்.

(ii) இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்களின் வாதங்களை இந்த நீதிமன்றம் கவனமாக பரிசீலனை செய்தபோது மனுதாரர் தரப்பில் நீதிமன்ற சம்மன் மூலமாக வந்தவாசி வட்டாட்சியரை வழக்கு சம்பந்தபட்ட ஆவணங்களுடன் வரவழைத்து மனுதாரர்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சியாக விசாரணை செய்ய அனுமதி வழங்கி உத்தரவாக வேண்டி தாக்கல் செய்துள்ளதை பரிசீலனை செய்து பார்த்தபோது வழக்கானது

பிரதிவாதிகள் தரப்பு விசாரணைக்காக வைக்கப்பட்டுள்ள நிலையில் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் வந்தவாசி வட்டாட்சியரை ஆவணங்களுடன் வரவழைத்து சாட்சிகளை விசாரிக்க வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நீதிமன்ற சம்மன் மூலமாக வட்டாட்சியரை அழைத்து விசாரணை செய்ய மனு தாக்கல் செய்யதுள்ளதை பரிசீலனை செய்த வகையில், மனுதாரர்கள் வழக்கில் எதிர்வாதம் செய்ய நிரூபிக்க போதிய வாய்ப்பு அளித்து வழக்கினை தீர்மானிக்கும் போது தான் சரியான தீர்வு கிடைக்கும் என்றும், மனுதாரர்கள் தரப்பில் வாதிடப்பட்டதை பரிசீலனை செய்தும் மேலும், வழக்கு 2009 ல் தாக்கல் செய்து தற்போது 15 வருடங்களுக்கு மேல் நிலுவையில் இருந்து வருவதால் வழக்கினை காலதாமதம் செய்யாமல் துரிதமாக வழக்கினை முடிக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் இம்மனுவானது அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர்கள் வந்தவாசி வட்டாட்சியருக்கு நீதிமன்றம் மூலம் சாட்சி சம்மன் அனுப்பி ஆவணங்களுடன் சாட்சியமளிக்க படி மெமோ 3 நாட்களுக்குள் தாக்கல் செய்ய வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

முடிவாக:-

**இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.**

**படி மெமோ 3 நாட்களுக்குள் தாக்கல் செய்ய உத்திரவிடப்படுகிறது.**

**அசல் வழக்கு வாய்தா – 10.12.2025**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் படித்துப் பார்த்து பிழை திருத்தம் செய்யப்பட்டு 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24- ஆம் நாளான இன்று என்னால் அவையறிய பரப்பட்டது.

(ஒம்) செ. மகாலட்சுமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வந்தவாசி.

மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் –இல்லை.
எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் – இல்லை.

(ஒம்) செ. மகாலட்சுமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வந்தவாசி.